வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.6217 /ஆ4/2025 நாள்:15.12.2025

| | | |
|---|---|---|
| பொருள் | : | தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத் தேர்வு –2025–2026 ஆம் ஆண்டு – பத்தாம் வகுப்பு பயிலும் மாணவ /மாணவிகளுக்கு –31.01.2026 (சனிக்கிழமை) அன்று தேர்வு நடைபெறுதல் –அறிவுரைகள் வழங்குதல் –சார்பு |
| பார்வை | : | அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.017342/ டி(1)/ /2025 நாள் 12.12.2025 |

===============

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதங்களுக்கிணங்க 2025–2026 ஆம் கல்வியாண்டில் "தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத் தேர்வு" (TAMILNADU CHIEF MINISTER'S TALENT SEARCH EXAM –TNCMTSE) 31.01.2026 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது.

அரசு பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் இத்தேர்விற்கு விண்ணபிக்கலாம் என பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்வில் 1000 மாணாக்கர்கள் (500 மாணவர்கள் , 500 மாணவியர்கள் ) நடைமுறையிலுள்ள இடஒதுக்கீட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உதவித்தொகை ஒரு கல்வியாண்டிற்கு ரூ.10,000/– (மாதம் ரூ. 1000/– வீதம் ஒரு கல்வியாண்டிற்கு 10 மாதங்களுக்கு மட்டும்) இளநிலை பட்டப்படிப்பு வரை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தேர்விற்க்கன பாடத்திட்டம் :**

தமிழ்நாடு அரசின் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளின் கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில் உள்ள பாடத்திட்டங்களின் அடிப்படையில் கொள்குறி வகையில் இருதாள்களாக தேர்வு நடத்தப்படும். ஒவ்வொரு தாளிலும் 60 கேள்விகள் இடம்பெறும். முதல் தாளில் கணிதம் தொடர்புடைய வினாக்கள் 60 மற்றும் இரண்டாம் தாளில் அறிவியல் மற்றும் சமூக அறிவியல் தொடர்புடைய வினாக்கள் 60 இடம்பெறும்.

எனவே அரசு /நகரவை /ஆதிதிராவிடர் நல உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ/மாணவியர்கள் அறியும் வண்ணம் அறிவிப்பு பலகையில் ஒட்டவும், நடவடிக்கை மேற்கொள்ள தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஓம். //
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்

பெறுநர்:
அனைத்து அரசு/நகரவை /ஆதிதிராவிடர் நல உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்:

- மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை ) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.
- மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி ) அவர்களுக்கு தகவலுக்காக தெரிவிக்கலாகிறது.

| தமிழ்நாடு முதலமைச்சர் திறனாய்வுத்தேர்வு 2025-2026 | |
|---|---|
| பத்தாம் வகுப்பு பயிலும் அனைத்து அரசு பள்ளி மாணவர்களுக்குண்டான தேர்வு | |
| மாணவர்கள் விண்ணப்பங்களை http://www.dge.tn.gov.in பதிவிறக்கம் செய்யும் தேதி | 18.12.2025 முதல் 26.12.2025 |
| மாணவர்கள் விண்ணப்பங்களை பள்ளித்தலைமை ஆசிரியரிடம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 26.12.2025 |
| தேர்வுக்கட்டணம் | ரூ.50/- |
| **தேர்வு நடைபெறும் நாள்** | **31.01.2026 (சனிக்கிழமை)** |
| முதல் தாள் (கணிதம்) | காலை (10.00 மணி முதல் 12.00 மணி வரை ) |
| இரண்டாம் தாள் (அறிவியல் மற்றும் சமூக அறிவியல்) | பிற்பகல் (2.00 மணி முதல் 4.00 மணி வரை ) |